வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ‘நாட்டார் தெய்வங்கள் வைதீக மயமாதல்

**பா. எழில்செல்வன்**

**முனைவர் பட்ட ஆய்வாளர்,**

**தமிழாய்வுத்துறை,**

**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,**

**திருச்சி -2**

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டார் தெய்வ வழிபாடு மிகவும் தொன்மையானது, பழமையானது, இயற்கையின் ஆற்றலை அறிந்து கொள்ளாத மனிதன் அவற்றைக் கண்டு அஞ்சி, தன்னைப் பயமுறுத்தும் இடி, மின்னல், மழை முதலானவற்றை வழிபட ஆரம்பித்த காலத்திலேயே நாட்டார் தெய்வ வழிபாடு தோன்றி விட்டது எனலாம். இவ்வழிபாடு பண்பாட்டின் நாற்றங்காலாகவும், தமிழர்களின் வீரம் செறிந்த கலை வாழ்வியலைக் காட்டும் தூண்களாகவும் விளங்குகின்றன.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு கிராமமும் கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தியால் பிணைக்கப்பட்டு அச்சக்தியைக் கிராமப்புறத் தெய்வமாக வழிபடுகின்றது. கண்ணுக்குப் புலப்படாத சக்தியோடு தங்களது முன்னோரையும், இயற்கையையும், தலைவர்களையும், வீரர்களையும், இன்ன பிறவற்றையும் இணைத்து வணங்குவது நாட்டார் மரபாகும்.

நாட்டார் வழிபாட்டில் ஆண் தெய்வங்களைக் காட்டிலும் பெண் தெய்வ வழிபாடு மிகுதியாகக் காணப்படுகிறது. தாய் தெய்வ வழிபாடு நூற்றுக்கணக்கான பரிமாணங்களை உடையது அவற்றுள் ஒன்று ‘மாரியம்மன்’ வழிபாடு. ‘மாரி’ என்றால் மழை என்பது பொருள்.மாரியம்மன் இல்லாத ஊர்களைத் தமிழ் நாட்டில் பார்க்கமுடியாது. புலம் பெயர்ந்த தமிழர்கள் அனைவரும் கடல் கடந்தும் இவ்வழிபாட்டை மேற்கொள்கின்றனர். மிகவும் பிரசித்தி பெற்ற அன்பில் மாரியம்மன் கோயில் பொன்னி நதியாம் காவிரி (கொள்ளிடம்)பாயும் சோழ வளநாட்டில் திருச்சி மாவட்டம் இலால்குடியை அடுத்து, வயலும் சோலைகளும் சூழ்ந்துள்ள அன்பில் கிராமத்தில் அமைந்துள்ளது. தாய் தெய்வ வழிபாட்டில் சிறந்து விளங்கும் இக்கோயில் சிறுதெய்வ வழிபாட்டு நெறிமுறையில் இருந்து மாற்றம் பெற்று பெருந்தெய்வ வழிபாட்டு நெறிக்கு எவ்வாறு மாறியது என்பதையும், அதற்கான அரசியல் சூழலையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**கலைச் சொற்கள்**

நாட்டார் தெய்வம்,பெருந்தெய்வம், சிறுதெய்வம், பண்பாட்டு விழுமியம், மாரியம்மன், வைதீக மயமாதல், சீதளா தேவி, முசுகுந்த சக்கரவர்த்தி, வெப்பு நோய்.

**முன்னுரை**

மனிதன் தொடக்க காலத்தில் இயற்கையை வணங்கினான். பின் சமூகத்தில் பல்வேறு வளர்ச்சி ஏற்படும் போது கதைகளும் புராணங்களும் தோன்றுகின்றன. அரசுகள் உருவாகி வளர்ந்த போது ஆள்பவன், ஆளப்படுபவன் என்ற நிலையில் பெருந்தெய்வம், சிறு தெய்வம் என்ற பிரிவுகள் ஏற்பட்டன. புராணங்களோடு பெருந்தெய்வங்களும், மக்கள் நாவிலே பாட்டாக சிறு தெய்வங்களும் நிலைபெற்று நின்றன. சிறுதெய்வ வழிபாடு மக்களின் உணர்வோடும், அவர்களின் வாழ்வியல் சடங்குகளோடும் தொடர்புடையதாக இன்று வரை இருந்து வருகிறன. பொருளாதாரத்தில் சிறு தெய்வ ஆலயங்கள்வளர்ச்சி அடைகிற போது, அதனை அரசாங்கம் தானாக முன்வந்து கையகப்படுத்த முயலும். அத்தகைய நிலையை தான் அன்பில் மாரியம்மன் கோயில் இன்று அடைந்துள்ளது கோயில் நிர்வாகத்தை அரசாங்கம் தன்வயப்படுத்திய பிறகு அங்கு பூசை செய்வதற்கான உரிமை பூசாரிகளிடமிருந்து பறிக்கப்பட்டு பிராமணர்களின் வசம் ஒப்படைக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து வைதீகமும் அங்கு நிலை கொண்டு விடுகிறது. அந்த வகையில் அன்பில் மாரியம்மன் கோயில் வைதீக நெறிக்கு மாற்றப்பட்டதையும்,பரம்பரை பூசாரிகள் தன் வாழ்வுரிமைகளை எவ்வாறு இழந்தனர் என்பதையும், அதற்கான அரசியல் காரணத்தையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**நாட்டார் தெய்வங்கள் சொல் விளக்கம்**

கிராமத்து மக்களை நாட்டார் என்றும் கூறுவர். ‘நாட்டார்’என்ற சொல் மக்களுள் ஒரு நிலப்பகுதியினர் என்ற பொருளில்தான் நாட்டுப்புற இலக்கியத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சாதியினரைக் குறிப்பதற்கும் ‘நாட்டார்’ என்ற சொல் இக்காலத்தில் பயன்படுகிறது. இதனால்,‘நாட்டார்’ என்பது நாட்டுப்புறத்தாரை மட்டுமே குறிக்கும் என்பதை முதலில் அறியவேண்டும். “நாட்டுப்புறவியல் அறிஞர் நா. வானமாமலை, முதன்முதலில் நாட்டுப்புறத்தாரை ‘நாட்டார்’ என்று குறிப்பிட்டு அவர்களது வரலாற்றினை, இலக்கியத்தைக் குறித்து எழுதுவதை ‘நாட்டார் வரலாறு’ என்று எடுத்துக்கூறினார்.”(https://www.tamilvu.org/courses/degree/a061/a0611/html/a0611113.htm பார்வை 20-02-25).நாட்டுப்புற ஆய்வாளர்கள் flok என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை ‘நாட்டார்’ என்று பயன்படுத்தினர்.

ஆய்வாளர்கள் நாட்டார் மக்கள் வணங்கிய தெய்வங்களைச் சிறுதெய்வம் என்ற பெயரில் அழைத்தனர். முதன்முதலாக “சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்” என்று அப்பர் பெருமான் தேவாரத்தில் பயின்று வருகிறது. இதன் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு ஆகும். இதற்கு நேர்மாறாகப் ‘பெருந்தெய்வம்’ என்ற சொல்வழக்கு புறநானூற்றிலேயே காணப்படுகிறது. இரண்டு வேந்தர்களையும் ஒன்றாகக் கண்ட புலவர்,“இரு பெருந்தெய்வமும் உடன் நின்றாஅங்கு” (பாடல் எண்: 58) என்று பலராமனையும் திருமாலையும் நினைத்துப் பாடுகிறார். எனவே, சமூகத்தின் அடித்தளத்து மக்கள் வழிபடும் கடவுளரைச் சிறு தெய்வங்கள் எனவும், மேல்தளத்து மக்கள் வழிபடும் தெய்வங்களைப் பெருந்தெய்வம் எனவும் குறிப்பிடும் வழக்கம் அக்காலத்திலேயே இருந்திருப் பதாகத் தெரிகிறது.

“ஆய்வு நெறியில் ‘சிறுதெய்வம்’,‘பெருந்தெய்வம்’ என்ற சொற்களைத் தாழ்ந்தவை, உயர்ந்தவை என்ற பொருளில் எடுத்துக்கொள்ள இயலாது. உண்மையில் சிறுதெய்வங்கள் எனப்படுபவையே மிகப் பழையநம்பிக்கைகளையும் உணர்வுகளையும் பேணி நிற்பவையாகும்.”

(தொ.பரமசிவன், அழகின் அசைவு,ப.134)

17ஆம் நூற்றாண்டில் குமரகுருபரர்,“செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்”என்று முருகனைக் குறிப்பிடுகின்றார். இப்பாடலில் செத்துப் பிறப்பனவாக அவர் குறிப்பது சிறு தெய்வங்களையே என்று ஊகிக்கலாம்.

**சிறுதெய்வங்களின் பண்புகள்**

- ❖ பிராமணரால் பூசை செய்யப் பெறாதவை.
- ❖ இரத்தப் பலி ஏற்புடையவை.
- ❖ நாள்தோறும் ஆறுகாலப் பூசை பெறுவதில்லை.
- ❖ திருவிழாக்களில் ‘சாமியாட்டம்’ இடம்பெறும்.

**தாய்த் தெய்வ வழிபாடு**

நாட்டார் தெய்வங்கள் இன்பத்தில் மட்டுமல்லாது நம் துன்பத்திலும் பங்கு கொள்கின்றன. நாட்டார் வழிபாட்டில் ஆண் தெய்வங்களைக் காட்டிலும் மிகுதியாகத் தாய்த் தெய்கள் வழிபடப்படுகிறன. தமிழ்நாட்டில் தாய்த்தெய்வ வழிபாடு என்பது மிகத் தொன்மையானது என்பதற்கு இலக்கியங்கள் ஆதாரம அமைகின்றன. “சங்க இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களும் தரும் குறிப்புகளின்படி குழந்தை பெற்ற தாயினைக் குறிக்கும் சொல்லாகச் ‘செல்வி’ என்ற சொல்லே காணப்படுகின்றது. காடுகெழு செல்வி, கடல்கெழு செல்வி ஆகிய தொடர்களால் தாய்த் தெய்வம் சுட்டப்படுகின்றது. பிற்காலத்தில் வந்த அம்மன் என்ற சொல்லைப் போல ‘செல்வி’ என்ற சொல் முற்காலத்தில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. ‘அம்மன்’ என்ற சொல்லுக்குச் ‘சீமாட்டி’ அல்லது ‘உயர்குடிப் பெண்’ என்பது பொருளாகும்.”

(தொ.பரசிவன், அழகின் அசைவு,ப.214)

இத்தகைய பழைமையான தாய்த் தெய்வ வழிபாடு பல பரிணாமங்களை உடையது. அவற்றுள் ஒன்று மாரியம்மன் வழிபாடு. ‘மாரி’ என்றால் மழை என்று பொருள். “முறையான ஊர் வழிபாடு பெறாத காலத்தில் இத்தெய்வம் சினங்கொண்டு மழையினை நிறுத்திவைத்துவிட்டு வெப்பு நோயினைப் பரப்பி விடும். மனிதர்களோடு மட்டுமன்றிக் கால்நடைகளுக்கும் இத் தெய்வம் வெப்பு நோயை (கோமாரி) வழங்கித் தண்டிக்கும். அக்கினி மகுடம் கொண்ட இத்தெய்வத்திடம் அடியவர்கள் தாங்கள் அக்கினிச்சட்டி ஏந்தித் தங்களை ஒறுத்துக்கொண்ட அருள் வேண்டி நிற்பது வழக்கம்.”

(தொ.பரசிவன், அழகின் அசைவு,ப.224)

**அன்பில் மாரியம்மன் கோயில் தோற்றம் குறித்து அர்ச்சகர் தரும் தகவல்கள்**

இக்கோயில் குறித்து இந்து அறநிலையத்துறை தனது வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள செய்தியும், அர்ச்சகர் தரும் தகவலும் ஓரே செய்தியாக உள்ளது.

“அன்பில் அருள்மிகு மாரியம்மன் முதலில் சுயம்புவாக அவதரித்து அதன்பின்னர் மூலவர் அம்மன் சுதை வடிவிலும், உத்ஸவர் உலோகத்தாலும் அமையப் பெற்றுள்ளது. அம்பாள் சீதளபரமேசஸ்வரி என்ற திருநாமத்துடன் விளங்குகின்றார். அம்பாள் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் சகோதரி என்றழைக்கப்படுவதுண்டு. இவ்வாலயத்தில் சுயம்பு அம்பாளுக்கு முதலில் அபிஷேகமும், அதன்பின்னர் உத்ஸவருக்கு அபிஷேகமும் நடைபெறுவது வழக்கம். மூலவர் சுதை ஆகையால் அபிஷேகம் கிடையாது". (https://hrce.tn.gov.in/hrcehome/index_temple.php?tid=26152, பார்வை19-02-25)

தமிழர்கள் மட்டுமல்லாது தெலுங்கர்களும் மாரியம்மன் வழிபாட்டை மேற்கொள்கின்றனர். தெலுங்கு மொழியில் மாரியம்மன் என்பதற்கு சீதளா(குளிர்ச்சி)தேவி என்பது பெயர். அது மட்டும் அல்லாது முத்தியாலம்மன், ரேணுகாதேவி, எல்லம்மன் போன்ற தெய்வங்கள், தெலுங்கு மக்கள் வழிபடுகிற பெண் தெய்வங்கள் ஆகும். நாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட அன்பில் மாரியம்மன் கோயிலில், கருவறையில் இருக்கின்ற மாரியம்மனுக்கு சீதளபரமேஸ்வரி என்ற பெயர் இருப்பதாகப் பார்த்தோம். சில ஆண்டுகளுக்கு முன்புவரை இக்கோயிலின் கருவறை முன்பாக சிரசு மற்றும் உடைய ஒரு அம்மன் சிலை இருந்தது. தற்சமயம் அந்தச் சிலை கோயில் வளாகத்தின் ஒரு மூலையில் ரேணுகாதேவி என்ற பெயரோடு தனி சந்நிதி பெற்று விளங்குகிறது. மாரியம்மனோடு ஒத்த தன்மையுடைய இவ்இரண்டு தெய்வங்களையும் தெலுங்கர்கள் மாரியம்மன் ஆகவே கருதி வழிபட தொடங்கிவிட்டர் என்பதை அறிய முடிகிறது.

இந்து அறநிலையத்துறையில் இல்லாத மற்றொரு தகவலையும் அர்ச்சகர் கட்டுரையாளரிடம் பகிர்ந்து கொண்டார், இக்கோயில் முசுகுந்த சக்கரவர்த்தி காலத்தில் தோன்றியது என்று கூறினார். முசுகுந்த சக்கரவர்த்தி (குரங்கு முகம் கொண்ட அரசன்) என்பவர் புராணங்களோடு தொடர்பு உடைய அரசன் மட்டுமே. இதற்காக வரலாற்றியல் ஆதாரங்கள் எதும் இல்லை. இப்படி இருக்க அன்பில் மாரியம்மனோடு தொடர்பு படுத்துவது முற்றிலும் முரணாகும்.

**அன்பில் மாரியம்மன் கோயில் பூசாரியும் ஊர்மக்களும் தரும் தகவல்கள்**

இக்கோயிலின் பரம்பரை பூசாரியாக மூன்று குடும்பங்கள் இன்று வரை இருந்து வருகின்றனர். தற்போது மூன்றாம் தலைமுறை பூசாரிகள் கோயிலில் பூசைமுறையினை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களில் ஒருவரே நாம் சந்தித்த தர்மராஜ் அவர்கள். இவருடைய தந்தையார் சிங்காரவேலுப் பிள்ளை அவருடைய தந்தையார் இராமசாமிப் பிள்ளை என மூன்று தலைமுறையாக, இக்கோயிலில் பூசை செய்து வருவதாக கூறினார். மேலும் இக்கோயில் குறித்து அவர் அளித்த தகவல்கள் மேற்கண்ட தகவலுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

**தர்மராஜ் பூசாரி அளிக்கும் தகவல்...**

இக்கோயில் சுமார் 120 லிருந்து 150 ஆண்டுகள் மட்டுமே பழமை வாய்ந்தது. ஏனெனில் எங்கள் தாத்தா காலத்தில் தான் இக்கோயில் இங்குத் தோற்றுவிக்கப்பட்டது. இக்கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிற கொள்ளிடம் ஆற்றில் திருக்காட்டுப்பள்ளியைச் சேர்ந்த செம்படவர்கள் (மீனவர்கள்) மீன் பிடிக்கும் போது, ஒரு இரும்பு கொப்பரை ஒன்றில், தற்போது கோயில் கருவறையின் உள்ளே இருக்கின்ற லிங்க வடிவிலான அந்த கல் இவர்கள்

வலையில் வந்து சிக்கியது. அதனைப் பெரிதாகப் பொருட்படுத்தாது அதனை அக்கரையில் தூக்கிப் போட்டுவிட்டு வீடுதிரும்பினர். இந்நிகழ்வு நடந்த அன்றைய நாளில் கோயில் பணியாளர்கள் வசிக்கிற நெடுந்தெருவில் உள்ள ஒரு பெண்ணுக்குச் சாமி வந்து “இந்த ஊர காக்க வந்த என்னைக் கரையிலேயே போட்டு வந்துடீங்க என்ன எடுத்து வணங்குனா இந்த ஊரையும் ஊர் மக்களையும் காப்பாத்துவேன்” என்று அந்தப் பெண் சாமி ஆடினார்களாம். உடனே, இக்கோயிலின் தற்போது ஸ்தானிகராக இருந்து வருகிற பாலாஜி என்பவரின் தாத்தா, தர்மராஜ் பூசாரியின் தாத்தா மற்றும் சில ஊர் முக்கியஸ்தர்கள் கரையோரத்தில் இருந்த லிங்க வடிவிலான அக்கல்லை எடுத்து வந்து தற்போது இருக்கின்ற அதே இடத்தில் குடிசை கொட்டகை அமைத்து அன்பில் மாரியம்மனாக வணங்கத் துவங்கினர்.சில காலம் கழித்த பிறகே சுதை வடிவில் அம்மனுக்கு சிலையமைத்து வணங்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சாதி வேறுபாடுகள் கடந்து ஊர் மக்கள் அனைவரும் இத்தெய்வத்தைத் தங்களின் தாயாகக் கருதி வணங்கத் துவங்கினர். இம்மாரியம்மனும் அவர்கள் கேட்ட வரத்தை தந்து இவ் ஊரையும்,ஊர் மக்களையும் காத்து வந்தாள். காலப்போக்கில் மிகவும் பிரசித்திப் பெற்ற கோயிலாக மாற்றம் பெற்றது.வெளியூரில் இருந்து மக்கள் வருகைதர தொடங்கினர். தங்களைக் காத்து வருகிற இத்தய்வத்திற்கு மக்கள் பொன்னையும் பொருளையும் நிலங்களையும் கொடையாக வழங்கினர். மக்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடையும் போது குடிசையாக இருந்த கோயில் மண்டபங்களோடு கூடிய அழகிய கோயிலாக வளர்ச்சி அடைந்தது.

**நாட்டார் தெய்வம் வைதீக நெறிக்கு மாற்றம் பெறுதல் :**

இராமசாமிபிள்ளை மற்றும் இரண்டு பங்காளிகள் முறையே மாதத்தில் பத்து நாட்கள் பூசை முறையினை மேற்கொண்டு வந்தனர். இதன் மூலம் நிறைவான ஒரு வாழ்க்கையையும் வாழ்ந்து வந்தனர். நாளடைவில் மக்கள் கூட்டம் கூட்டமாக இக்கேயிலுக்கு வருகைத்தரத் தொடங்கினர். அதனால், கோயிலுக்கும் நிறைய வருமானம் பெறுகியது.

வருமானம் வருகிற ஆன்மீகத் தலங்களை அரசு அதிகாரம் தன்னகத்தே எடுத்துக் கொள்ள முயலும். அரசு அதிகாரம் உள்ளே நுழைகிற போது, பூசை செய்யும் உரிமையும் பிராமணர்கள் வசம் ஒப்படைக்கப்படுகிறது. இதையடுத்து எளிய மக்களின் உணர்வோடு கலந்து இருந்த வழிபாட்டு முறைகள் ஆகமநெறிக்கு உட்பட்டதாக நிலை நிறுத்தப்படுகிறது. “பழனி கோயிலில் முன்பு பூஜை செய்தது பிற்பட்ட சமூகத்தினர். ஆனால் திருமலை நாயக்கர் காலத்தில் களவாளாக இருந்த இராமப்பையன் இன்னொரு சமூகத்தினர் கையிலிருந்து திருநீறு வாங்குவதை விரும்பவில்லை. இதையடுத்தே அங்கு பூஜை செய்யும் உரிமை பிராமணர்களுக்கு மாறுகிறது”

(தொ.பரமசிவன், அழகின் அசைவு,ப.27)

இதுபோன்று தமிழகத்தில் பல ஆலயங்களை உதாரணமாக கூறமுடியும்.

இதே நிலைதான் அன்பில் மாரியம்மன் கோவிலுக்கும் இன்று ஏற்பட்டுள்ளது. தற்போது இக்கோயில் திருவரங்கம் கோயில் நிர்வாகத்திற்கு உட்பட்டதாக இயங்கி வருகிறது. அரசு இக்கோயிலைக் கையகப்படுத்திய பிறகு பிராமணர்கள் கருவறையில் பூசை செய்யும்

உரிமையைப் பெற்றனர். இதைத் தொடர்ந்து மரபு வழியாகப் பூசை செய்யும் உரிமையை உடைய வேளாளர்கள் இன்றளவும் கருவறைக்குள் நுழைய முடியாத நிலை நிலவுகிறது.

இந்த உரிமை பிரச்சினை நீதிமன்றம் வரை சென்றது. இருப்பினும் வழக்கில் பூசாரிகள் வெற்றி பெறமுடியாமல் போனது. நீதிமன்றம் பூசாரிகளுக்கும் குருக்களுக்கும் இடையே ஒரு சமாதானத்தை செய்து வைக்க முயற்சித்தது. கோயில் கருவறைக்குள்ளே பிராமணர்கள் பூசை செய்யட்டும், சுற்றுப் பிரகாரத்தில் இருக்கின்ற மாரியம்மன் உடைய பிள்ளைகள் என்று சொல்லப்படுகிற செல்லாண்டி அம்மன், காமாட்சி அம்மன், பரமனார், சப்பானி கருப்பு, மதுரை வீரன், பேச்சியம்மன், சாம்பான் மற்றும் காவல் தெய்வம் கருப்பண்ணசாமி ஆகிய தெய்வத்திற்கு பூசாரிகள் பூசை செய்யலாம் என்ற தீர்ப்பை வழங்கியதாக தர்மராஜ் பூசாரி கட்டுரையாளரிடம் தெரிவித்தார். இவர்கள் பூசை செய்வதற்காக மிராசுபாத்தியம் (மரியாதை சம்பளம்) 25 பைசா வழங்கப்பட்டுள்ளது.

பிராமணர்கள் பூசை செய்யும் அதிகாரத்தைப் பெற்ற பிறகு ஆகமங்களின் அடிப்படையில் இக்கோயில் மாற்றமடைந்திருப்பதை நாம் கண்கூட காண இயலும். எடுத்துக்காட்டாகக் கொடிமரம் வைத்தல், திருவிழா காலங்களில் கொடியேற்றம் செய்தல், சண்டி ஹோமம்,கோடி அர்ச்சனை செய்தல், நவராத்திரி உற்சவம்,பஞ்சபிரகாரம், சோமவாரம் என வைதீகச் சடங்குகளோடு தொடர்புடைய பல மாற்றங்களை இக்கோயில் அடைந்துள்ளது. அதுமட்டுமின்றி கோயிலின் உள்ளே நுழைந்தவுடனே வலதுபக்கம் அர்ச்சகர் மற்றும் பூசாரிக்கு என்று தனித்தனி மடைப்பள்ளி காணப்படுகின்றன. இது தீண்டாமையின் உச்சமாகும்.

**பூசாரிகளே உரிமை உடையவர்கள் என்பதற்கான எச்சங்கள்**

சிறு தெய்வ வழிபாட்டைப் பெரு தெய்வ வழிபாடாக மாற்றுகின்ற முயற்சி சமீப காலமாகத் தொடர்ந்து பல இடங்களில் நடந்து வருகிறது. பெருஞ்சமயப் புயலுக்குள் சிக்காமல் தாய்த் தெய்வங்கள் தனித்து நிற்பதற்கும் சடங்குகள் காரணமாக அமைகின்றன. “சடங்குகளே தாய்த் தெய்வக் கோயில்களில் முதன்மை பெறுகின்றன் அங்கு நடைபெறும் கொண்டாட்டங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே தாய்த் தெய்வங்கள் பெரும்பாலும் சடங்கியல் சமயச் (Ritualisitc Religion) சார்பையே வெளிப்படுத்துகின்றன. தாய்த்தெய்வ வழிபாட்டின் தொன்மைக்கு இஃதொரு வலிமையான சான்றாகும்”

(தொ.பரமசிவன், அழகின் அசைவு,ப.220)

இக்கோயிலில் திருவிழா காலங்களில் நடைபெறுகிற சடங்கு முறைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

மாசி - பங்குனி மாதங்களில் அனேக மாரியம்மன் கோயில்களில் பூச்சொரிதல் விழா நடைபெறுவது வழக்கம். இக்கோயிலில் பங்குனி முதல் ஞாயிறுஅன்று பூச்சொரிதல் விழா நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து 25 நாட்கள் மிகச்சிறப்பாகத் திருவிழா நடைபெறும்.திருவிழாவின் முதல் 14 நாட்கள் மாரியம்மன் பச்சை பட்டினி விவரம் மேற்கொள்கிறாள். பச்சை பட்டினி விரதத்தில் மாரியம்மனுக்கு உணவுப்படையல் கிடையாது. அதற்கு மாற்றாகத் துள்ளுமாவு, நீர்மோர், கரும்பு, பானகம், இளநீர் மட்டுமே உணவாகப் படைக்கப்படுகிறது. தன் குடிமக்கள் நலமோடு வாழ வேண்டும் என்பதற்காக எங்கள் தாய் இவ்விரதம் மேற்கொள்கிறாள் என்று இப்பகுதி மக்கள் கண்ணீருடன் கட்டுரையாளரிடம் பகிர்ந்து கொண்டனர்.

திருவிழா தொடங்கி இரண்டாவது சனிக்கிழமை பச்சை பட்டினி விரதம் நிறைவு பெறுகிறது. விரதத்தை முடித்து வைக்கும் விதமாக அம்மன் முன்பாகப'பாவடை சாதம் படையலிடப்படுகிறது. இந்த படையல் போடும் முதல் உரிமை பூசாரிகளுக்கே உரியது. “விரதம் முடித்து மாரியாயி எங்க சாப்பாட்டத்தான் முதல்ல சாப்புடும்”என்று பூசாரி பெருமிதத்தோடு கூறும் போது அவர் கண்ணில் பேரானந்தத்தை நம்மால் உணர முடிந்தது. அதோடு மட்டுமல்லாது இன்றளவும் மாரியம்மனின் அலங்காரத்திற்குத் தேவையான சந்தனத்தைப் பூசாரிகளே வழங்கி வருகின்றனர்.

இத்திருவிழாவின் மண்டகப்படி உரிமையைக் கள்ளர், வெள்ளாளர்,ஆசாரியார், இசை வெள்ளாளர், செம்படவர் மற்றும் செட்டியார் ஆகியோர் பெற்றுள்ளனர். குறிப்பாக ஏழாம் நாள் திருவிழா செம்படவர்களுக்கு உரியது. அன்றைய நாளில் இரவு 12 மணிக்கு மாரியம்மனைக் கொள்ளிட ஆற்றில் எழுந்தருளச் செய்து அபிஷேகம்,தீபாராதனை முடிந்து குதிரை வாகனத்தில் அம்மன் வீதி உலா வருகிறாள்.

கொள்ளிட ஆற்றின் மறுக்கரையில் இருக்கிற செம்படவர்கள் இக்கோயிலின் திருவிழாவில் உரிமையைப் பெற்றுள்ளது ஆராய தக்க ஒன்று. குறிப்பாக இவர்கள் நடத்துகிற திருவிழா கோயிலின் உள்ளே நடைபெறாமல் கொள்ளிடம் ஆற்றில் நடைபெறுவதையும் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இவ்விரண்டு நிகழ்வுகளும் மாரியம்மன் ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட தெய்வம் என்பதை, நிலை நிறுத்துவதற்கு ஆதாரமாக அமைகிறது.

மேலும் மாவு விரதத்தை முடித்து வைக்கிற பூசாரிகள், மாலை நேரத்தில் கோயிலில் இருந்து கைவிளக்கு ஒன்றை ஏற்றிக்கொண்டு தங்களது இல்லங்களுக்குச் சென்று, மாவிளக்கு, இளநீர், வெள்ளரிப்பிஞ்சு,துள்ளுமாவு, பயறு வகைகள் எனக் குளிர்ச்சித் தருகிற அத்தனை பொருள்களையும் படையலிட்டுத் தங்கள் இல்லங்களில் வழிபாடு செய்கின்றனர். இதனைத் தொடர்ந்து தங்கள் பங்காளிகள் அனைவரும் அவரவர் இல்லத்தில் இதே போல் வழிபாடு நடத்திய பிறகு, அனைவரும் ஒன்று கூடி கோவிலில் இருந்து எடுத்துச் வரப்பட்ட கைவிளக்கோடு மீண்டும் ஆலயத்தை வந்தடைந்து வழிபாடு நடத்துகின்றனர். அதன் பிறகு பூசாரிகள் தங்களது விரதத்தை முடித்துக் கொள்கின்றனர். மீண்டும் அந்தக் கைவிளக்கோடே தங்களது இல்லங்களைச் சென்றடைகிறார்கள். அவ்விளக்கை மறுநாளே கோயிலில் ஒப்படைக்கின்றனர். கைவிளக்கு ஏந்தி செல்வதனுடைய குறியீடு என்னவென்றால் மாரியம்மனைத் தங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்று வழிபாடு நடத்தி குளிர்விப்பதே ஆகும்.

பூசாரிகள் மேற்கொள்கிற இச்சடங்கு முறைகள் எதையுமே அர்ச்சகர்கள் தங்களது இல்லங்களில் மேற்கொள்ளவில்லை என்பது ஒப்பிட்டுச் சிந்திக்க தக்கதாகும்.

மேற்கண்ட நிகழ்வுகளின் மூலம் பரம்பரையாக இக்கோயிலின் பூசை முறையினை உடையவர்கள் தர்மராஜ் பூசாரியின் முன்னோர்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

**முடிவுரை**

சிறு தெய்வங்கள் வைதீக நெறிக்கு உட்பட்ட தெய்வமாக மாற்றம் பெறுவதை இக்கட்டுரை விளக்கியுள்ளது. கொள்ளிடம் ஆற்றில் நடத்தப்படும் செம்படையவர்களின் திருவிழா, அன்பில் மாரியம்மனை ஆற்றில் இருந்து கண்டெடுத்ததற்கான ஆதாரமாக அமைகிறது என்பதையும், அதிகார மையங்கள் கோயிலை உரிமை கொண்டாடும்போது

அதனை உருவாக்கிய எளிய மக்கள் கருவறையில் இருந்து வெளியேற்றப்படுவதையும் இக்கட்டுரை வெளிபடுத்தி உள்ளது. அன்பில் மாரியம்மனுக்குச் சந்தனம் வழங்குதல், பச்சை பட்டினி விரதம் முடித்து வைத்தல், கைவிளக்கு எடுத்துச் சென்று வீட்டுச்சாமி கும்பிடுதல் போன்ற நிகழ்வுகளின் அடிப்படையில் இக்கோயிலின் பூசை உரிமைக்குரியவர்கள் தர்மராஜ் மற்றும் அவரது பங்காளிகள் என்பதைத் தகுந்த ஆதாரம் கொண்டு இக்கட்டுரை எடுத்தியம்பியுள்ளது.

**துணை நின்ற நூல்கள்**


1. அழகின் அசைவு, தொ.பரமசிவன், காலச்சுவடு பதிப்பகம், சென்னை,2022.
2. தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும்,NCPH, சென்னை, 2022.
3. தொ.பரமசிவன் நேர்காணல், தொ.பரமசிவன், காலச்சுவடு பதிப்பகம், சென்னை,2021.
4. (https://hrce.tn.gov.in/hrcehome/index_temple.php?tid=26152, பார்வை: 19-02-25).
5. **(**https://www.tamilvu.org/courses/degree/a061/a0611/html/a0611113.htm பார்வை: 20-02-25**).**